**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், போச்சம்பள்ளி**
**OS.66/2017. நாள்.05.03.2025**

போச்சம்பள்ளி மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. சாட்சி திறந்த நீதிமன்றத்தில் அழைக்கப்பட்டு ஆஜர். நீதிமன்றத்தில் கிரேடு 3 பென்ஞ்ச் கிளார்க் திருமதி. நசீம் பேகம் அவர்களால் சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது. உரிமையியல் விசாரணை சட்டம் பிரிவின் கீழ் விசாரணை செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | விஜயகுமார் | **வயது** | 44 |
| **த/பெ. க/பெ.** | கணேசன் | **மதம்** | |
| **முகவரி** | ஆவத்துவாடி | **தொழில்** | விவசாயம் |

**வா.சா.1 ஆஜர். முதல் விசாரணை :**

நான் இவ்வழக்கில் 4–ம் வாதி ஆவேன். எனது தரப்பில் முதல் விசாரணை பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் என்னால் வழக்கறிஞருக்கு சொல்லப்பட்டு தயாரிக்கப்பட்டது ஆகும். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது ஆகும். எனது தரப்பில் கீழ்கண்ட ஆவணங்களை குறியீடு செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

1. 29.03.1990 தேதி 1–ம் வாதி பெயரிலான ஆவண எண்.224/90 கிரைய பத்திரத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. 03.07.2017 தேதிய பட்டா எண்.735 கணினி பட்டா சான்றிட்ட நகல் வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3. 06.07.2017 ஆம் தேதி 1–ம் வாதி பிரதிவாதிகளுக்கு அனுப்பிய மனு நகல் வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4. 07.07.2017 ஆம் தேதி 1–ம் வாதி அனுப்பிய மனுவை பிரதிவாதிகள் பெற்றுக் கொண்டதற்க்கான ஒப்புதல் அட்டைகள் 4 எண்ணம் வா.சா.ஆ.4 வரிசையாக குறியீடு செய்யப்படுகிறது.

5. தாவா சொத்திற்க்கான போட்டோ 2 எண்ணம், குறுந்தகடுடன் வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

6. நீதிமன்ற ஆணையரின் அறிக்கை வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

வாதிகள் தரப்பில் மேலும் ஆவணங்களை குறியீடு செய்வதற்க்காக வாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

சாட்சி கூறியதை என்னால் தட்டச்சருக்கு
கூறப்பட்டு சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து
காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு, சரியென
ஒப்புக்கொண்டார்.

SHANMUGANATHAN

Distirct Munsif cum Judicial Magaistrate
Digitally signed by SHANMUGANATHAN
Location: Pochampalli

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர், போச்சம்பள்ளி. கிருஷ்ணகிரி மாவட்டம்.